உ

சிவமயம்



இது

யாழ்ப்பாணத்துத் துன்னையம்பதி வாசரும்

இருமரபுந்துய்ய ஜெகராச ஜெகரட்ண முதலியார்

இராசசூரிய முதலியார் வழித்தோன்றலும்

சிதம்பரப்பிள்ளை ஆழியார் ஆழ்வாயினரின்

வழித் தோன்றலும்

உத்தம சைவவேளாண்குல திலகருமாகிய

காலஞ் சென்ற

# திரு. இளையதம்பி வல்லிபுரநாதன்

(காவற்றுறை) அவர்களின்

பிரிவு குறித்த

# நினைவு மலர்

தோற்றம் 20.1.1941 மறைவு 5.10.1987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# தோத்திரப்பாக்கள்

## பிள்ளையார் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் — விநாயகனே
விண்ணுக்கும் மண்ணுக்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணில் பணிமின் கனிந்து.

## தேவாரம்

தந்தையார் தாயார் உடன் பிறந்தார்
　　தாரமார் புத்திரரார் தாம்தாம் ஆரே
வந்தவா றெங்ஙனே போமா றேதோ
　　மாயமாம் இதற்கேதும் மகிழ வேண்டாம்
சிந்தையீர் உமக் கொன்று சொல்லக் கேண்மின்:
　　திகழ்மதியும் வாளரவும் திளைக்கும் செந்தி
எந்தையார் திருநாமம் நமச்சிவாய
　　வென்றெழுவார் இருவிசும்பில் இருக்கலாமே

எத்தாயர் எத்தந்தை எச்சுற் றத்தார்
　　எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்
செத்தால்வந்(து) உதவுவார் ஒருவர் இல்லை
　　சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பார்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
　　திருவாளைக் காஉடைய செல்வா என்றன்
அத்தாஉன் பொற்பாதம் அடையப் பெற்றால்
　　அல்லகண்டங் கொண்டடியேன் என்செய்கேனே.

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
　　பற்று நான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
　　திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோவேன் யார்க்கெடுத் துரைப்பேன்
　　ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
　　வருக வென்றருள் புரிவாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரண்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயே!
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோமுக்கு அருள் புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த
பித்தர்க்குப் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ருவமும் உருவமாகி அனுதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிளம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் உலகம் உய்ய

## திருப்புகழ்

அபகார நிந்தை பட்டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனைநான் நினைந்தருள் பெறுவேனோ
இபமா முகன் தனுக்கிளையோனே
இமவான் மடந்தை நற்தமிபாலா
செபமாலை தந்த சற்குரு நாதா
திருவாவினன் குடிப்பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



பேராவியத்தை எய்திய

## திரு. இளையதம்பி வல்லிபுரநாதன்

அவர்கட்கு நற்கதியருளுமாறு

## அன்னார் குலதெய்வங்கள் மீது

# பராவல்

### துன்னை வல்லியானந்தப் பிள்ளையார்

கொம்பொன் றிருசெவி மூன்றுகண் ணுல்வாய் கரமைந்துடன்
நம்பும் அடியார் துயர்தீர்த் தருளும் விநாயகரே
உம்பொன் னடியே துணையென் றிரந்த அடியனுக்கே
அம்பொன் னடிக்க ணமருந் திறனை அருளுதியே.

குட்டிப் பணிந்து குறையிரப் போரின் கலிதவிர்ப்பாய்
இட்டத் துடனுன் திருவீதி சுற்றி வணங்கிய நான்
மட்டில் கருணை வழங்கிறை யேகரி மாமுகனே
கிட்டி யிருக்கத் திருவரு ளீவது குற்றமின்றே.

பாதகஞ் செய்தவர் தாமும் திருவடி ஏத்தியுன்றன்
மோதக மேந்துங் கரங்கண் டுளத்தே அமைதி கொள்வர்
நீதறு வல்லியா னந்தத் தலத்து விநாயகனே
பாதம துறும்படி நின்னரு ளீந்தெனைப் பாலியுமே.

### ஸ்ரீவல்லிபுர ஆழ்வார்

கேசவனே கண்ணு துளசி யுகந்தவனே
வீசுதிரைப் பாற்கடலி லேந்துதலே — வீசுவிடப்
பாம்பணையை யேற்றுயே பாவி அடியனுடைய
ஓம்புநா ளேதோ வுரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தியிலே ஆழ்வாரைப் பாலித்தே ஆள்வாயே
சிந்தம் நிறையவரு மாயோனே — இத்தரையின்
பாசம் வெறுத்தேன் பாலாழி ஆண்டவனே
பேசும் திருவடிதந் தாள்.

## கோட்டடி அம்மன்

நாட்டிடை யாரும் பிரச்சினை தீர்ப்பவர் நாடிவந்து
கோட்டடிக் கோயிலில் கற்பூர ் தன்னை அணைத்துவிட்டு
நீட்டிய கையொடு சத்தியம் செய்திட தொண்டருக்கு
வாட்டிய துன்ப மழிப்பவ ளம்மா வழங்கருளே.

பாச வடிவுடைக் கோட்டடி யம்மன் குளிர்தருவே
மோசம் புரிந்தார் தமைநீ வருத்தித் திருத்திடுவாய்
தேசம் எலாமே பணியும் வடிவின் திருவினளே
பாசம் தவிர்த்துன் பணியடி சாரப் புரியருளே.

## குலதெய்வம் ஞானவைரவர்

வேதன் தலைவது கொய்தவ ஞான வயிரவரே
ஏதுந் துயருறு போதில் நினதடி ஏத்திநின்றால்
யாதும் தொலையும் சுகமே மலரும் அருளளிப்பாய்
பாதம் பொருந்தும் படியருள் செய்க பணிந்தனனே.

உன்தன் அழகிய கோயி லடைந்தே உளமுருகி
என்தன் குறையுரைத் திட்டபோ தங்கவை நீக்கிநின்றாய்
பொன்சிந் தழகின் வடிவினை சூலப் படையினனே
நின்பொன் னடியே நினைந்தே னருளுதி நேயனுக்கே.

## முள்ளியடி வைரவர்

என்றும் நினதடியே எண்ணும் திறனுடையேன்
இன்றிம் முடலைப் புவியிடத்தே — பொன்றவிட்டு
வந்த அடியவனை வைரவா நின்பாதம்
தந்து அணைத்தாளு வாய்.

அன்புவடை மாலையிட்டு அன்னப் படையலிட்டு
உன்பரிவை வேண்டி இருந்தேனே — மன்பதையே
காத்தளிக்கும் ஞான வயிரவா பாதமிடைச்
சேர்த்தருளை யீவாய் இனி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்டி கட்டுக்கலைப் பிள்ளையார்

வானுற வோங்கு மலைகளும் ஓடிடு மாறுகளும்
தேனடை பூமரக் காவும் எனமிளிர் கண்டியிலே
தூநில மாகிய கட்டுக் கலையமர் ஐங்கரனை
ஈன மழித்தடி எய்திடு பேற்றினை ஈகுதியே.

வண்ணக் குறிஞ்சி நிலமுள்ள மக்கள் மனங்களித்து
நண்ணிப் பணிய நலனழித் தாளுவி நாயகனே
மண்ணிற் சிறப்பு மலர வழங்கினை யேயதுபோல்
விண்ணிற் சிறக்கத் திருவடி தந்திடு வேண்டினனே.

## கண்டி கதிரேசன்

கீற்றைப் புனைந்த அரனார் மகனுனை யேபணிந்து
பேற்றை யழிக்குதி என்றிரந் திட்ட தறிகுவையங்
கூற்றைத் தருநதி யாகிய பாரிய மாவலியாம்
ஆற்றங் கரைநிலத் தானவ ஈக அருளெனக்கே.

புத்தன் மதத்தவர் தாமும் நினதருட் பார்வைபெற
நித்தம் துதிக்கும் படிநிற்கும் வேலவ தேடுகிறேன்
சித்தம் நினக்கே எனத்துதித் திட்ட சிறியனுக்கு
பத்தித் திருப்புகழ் கண்டவ பேறு வழங்குதியே.

## கம்பளை முத்துமாரி அம்மன்

சக்திவடி வானவளே தாயாரே மாரியம்மா
சித்தம் களிக்கத் திருவருளைப் — புத்தமிர்தம்
என்று வழங்கநீ ஏனோ தயங்குகிறாய்
உன்றன் அடிதந் தருள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு

சீர்மலி துன்னைத் திருநிலப் புகழின்
ஏர்மலி வேளாண் மரபினில் வந்தவன்
பார்புக ழினைய தம்பியும் பண்புடைச்
சீர்மகள் சின்னம் மாவுமச் சிவனடி
போற்றிப் பணிந்திடு பேறென உதித்தவன்
சாற்றிய கல்வியை காசிநா தர்ப்பெயர்ப்
பள்ளியிற் துவங்கி ஞானா சிரியர்க்
கல்லூரி தன்னிற் கற்றுயர் வுற்றனன்
களுத்துறைப் பொலிஸ் பயிற்சியும் பெற்றவன்
தலத்துயர் கண்டியிற் கடமையைத் தொடங்கினன்
துன்னையின் ~~தனி வா~~யமும் சரஸ்வதி
நன்னலப் பெண்ணும் செய்தவத் தால்பிறந்
திட்டவி ராசேஸ் வரிதனை மணந்தறம்
மட்டிலா தியற்றி மாண்புட னிருந்தான்
மதனுடன் ரதியென மனமொரு வழிப்பட
இதமுற இணைந்தற வாழ்வது கண்டனர்
கடமை புரியிடம் எங்கணுந் துணைவியை
உடனழைத் தின்புறு மில்லறம் ஆற்றினன்
குற்றப் புலனாய்வுத் திணைக்களத் தன்பனே
முற்றுற ஒன்பது ஆண்டுகள் பணிபுரிந்
தாண்டது எண்பத் திரண்டினில் யாழ்நிலம்
மீண்டனன் பருத்தித் துறையமை கோட்டில்
பணியது சீஓ என்றிட நின்றவர்
அணிபெறு புதுமனை துன்னையில் அமைத்து
வதிரியிற் கோட்டில் கடமை புரிகையில்
பறையென எமைவிடுத் தரனடி தேடிக்
கொண்டனர் வல்லி புரமெனு ஏந்தல்
அண்டர துலகில் சாந்திபெற் றமைகவே.

- நண்பர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலஞ் சென்ற

## திரு. இளையதம்பி வல்லிபுரநாதன்

அவர்களது பிரிவு குறித்த

# இரங்கற்பாக்கள்

### திதி வெண்பா

தக்க பிரபவத்தைச் சார்புரட் டாதிதனில்
தக்கதிதி பூர்வச் சதுர்த்தியே — மிக்கபுகழ்த்
தேசுடைய வல்லிபுர நாதன் கயிலைமலை
ஈசனடி யுற்றுயர்ந்த நாள்.

### மனைவி இராசேஸ்வரி

மங்கலத் தாலிதந் தென்தனை மணந்திட்ட
மாட்சியை நினைந்தழுவனே
மனமார நேசித்து மகிழ்வுடன் வாழ்ந்தநாள்
மலர்வினை நினைந்தழுவனே
தங்கமேமன் றேயுரைத் திடநின்ற நின்குணத்
தகைமையை நினைந்தழுவனே
சிந்துபுன் னகையன்றி வெஞ்சொல் புகன்றிடாச்
சிறப்பினை நினைந்தழுவனே
எங்குநீர் கடமைசெய் திடவந்த போதெலாம்
என்னையும் அழைத்து வந்தீர்
இன்றிங்கு மண்கிடந் தலறவிட் டோடினீர்
என்னநான் செய்குவேனே
தங்கவழி தெரியாது கண்ணிலூறு நீரெல்லாம்
தரைசிந்திப் பாயவிட்டே
தினமழுது கண்வீங்கித் திகைத்துருகி நிற்கிறேன்
தேம்பியே மாய்கிறேனே.

### தந்தையார் இளையதம்பி

கையதனால் மண்ணளைந்த காலம் இன்னும்
கண்முன்னால் நிற்கிறது நீயோ மாண்டு
வையத்தில் மாற்றரிய துயரந் தந்து
மறைந்திட்டா யென்னிறுதிக் கடமை தன்னைச்
செய்யவெனக் காத்திருக்கத் திகைக்க வைத்துச்
சென்றதென்ன கொடுமையிது தாங்க லாமோ
உய்வறியேன் உணர்விழந்தேன் உருக்கு லைந்து
ஓலமிட வைத்தாயே என்செய் வேனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாய் சின்னம்மா

புலியிடந்து சென்றுவிட்ட குகையே போல
பேழைதகும்பி கலங்குதடா எங்கள் வாழ்வு
தலைசிறந்த தௌவிளங்க வைத்த நீயேன்
சாவணைந்தாய் சேதியிது கேட்ட போதே
நலிவடைந்து ஊனுருகி உணர்வு கெட்டேன்
நான்வணங்கி நின்றதெய்வ மெல்லாம் இந்த
நிலைபொருந்த வைத்ததுமேன் தெரிய வில்லை
நெஞ்சுபிளந் திடவுருகி நைந்தே னையோ.

## மாமன் வடிவேலு

பெற்றதந்தை பிடம்காட்டும் பாசம் போல
பேசரிய மருமகனே காட்டி நின்றீர்
குற்றமென்று சொல்லமுடி யாது நின்ற
குணமகனே நின்மரணச் சேதி யாலே
பத்தியெரி கின்றதிங்கே நெஞ்ச மையோ
பாய்கிறதே கண்ணிரண்டால் அருவி நாளும்
உற்றதுயர் மாறவழி காண லாமோ
ஓலமிட விதிதானோ ஐயோ ஐயோ.

## பிரதீபன்

பாசமுடன் பெற்றெடுத்தார் அம்மா அப்பா
பன்னீரிற் குளிப்பாட்டிப் பழமும் பாலும்
நேசமுடன் தந்துவளர்த் தெடுத்த தெல்லாம்
நிறையன்பு தந்துநின்ற நீங்கள் தானே
நேசமகன் துடித்திடுவன் என்றெண் ணுமல்
நீண்டவழிப் பயணமது மேற்கொண் டீரோ
நாசமிதைத் தாங்கமுடி யாதே அப்பா
நாளெல்லாம் இனித்துயரே நைந்தே னையோ.

## சகோதரி

ஆறியிருந் திடக்கண்டே னென்றில் லாமல்
அங்குமிங்கும் சில்வண்டு போல ஓடி
கூறுமுன்தன் கடமைசெயக் கண்டேன் இன்று
கும்பியெரித் தழலவைத்தே ஓடி விட்டாய்
தேறவழி யாருரைப்பார் தினமும் ஏங்கித்
திகைக்கவழி ஆக்கினையே சுடலைத் தீயில்
நீறெனவே கருகியதோ உன்தன் தேகம்
நெஞ்சதிர்ந்து மாய்கிறமே கதிகெட் டோமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரர்

சிறப்புமிக நகர்காவற் படையில் நின்று
 செய்திட்ட சேவையினல் உயர்வு கண்டு
பெறற்கரிய பேராளன் ஆனுய் என்று
 பெருமிதமாய் இருந்தோமே சடுதி யாக
இறப்புலகம் தேடினைநீ என்ற றிந்து
 இதயமிது நாருக வெடித்த வாறு
பெறற்கரிய சோகவெள்ளம் சேரப் பெற்ருேம்
 புரண்டழுதல் அல்லாதென் செய்வோ மையோ

## மருமக்கள்

ஊராரின் பிள்ளையெல்லாம் உங்கள் பிள்ளை
 உலகத்தார் சொல்லஅன்பாய் எம்மை யெல்லாம்
சீராகச் சிறப்பாகப் பேணி யன்பு
 தினம்தந்த மாமாவே சின்ன நாளில்
நீரோடுங் கண்ணுடனே திகைத்து வெம்பி
 நிலம்புரண்டு அழவிட்டுப் போன தென்ன
தாராள மனம்படைத்த மாமா சோகம்
 தீராது தினம்வருந்தத் திகைக்கி ளுேமே.

## பெருமக்கள்

பெற்றமக்கள் எத்தனைபே ரென்ப துண்டு
 பெருமக்கள் தொகைசொல்ல முடியா வாறு
சுற்றமுள்ள நாமெல்லாம் மக்க ளாகி
 தினம்பழகி நின்றிட்டோம் அன்பு நெஞ்சம்
அற்றதுவோ யாரையினி உம்போற் காண்போம்
 அணைத்தகரம் போற்றியவாய் எல்லாம் இன்று
பற்றியெரி நெருப்பிடையே பொசுங்கிப் போக
 பாவிகள்நாம் பதறியழு துருகி ளுேமே.

## மைத்துனர், மைத்துனிமார்

படிகடக்கு முன்மலர்ந்த வார்த்தை சொல்லி
 பற்றுடனே வரவேற்றே நலன்கள் கேட்டு
விடிவதன்முன் தோற்றுமொரு வெள்ளி போல
 விளங்கியநம் மைத்துனரே சிந்தை பாற
அடிபெயர்ந்த மரம்போல வீழ்ந்த தென்ன
 அநியாயம் வந்ததுமேன் அவதிப் பட்டு
குடியழிந்த துயர்பெருகக் குழறு கின்ருேம்
 கோமகனே என்சொல்லி ஆறு வோமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உற்ருர், உறவினர், அயலவர்

துடித்திடுவீர் பிறர்க்குதவும் நேரம் தன்னில்
துணையென்ருல் உயிர்கொடுக்க எண்ணும் போக்கு
அடுத்தவரின் நலம்பேணி வாழ்ந்த தீரன்
அவலமென மாய்ந்தகதை கேட்டு வெம்பி
வெடித்ததுவே நம்மிதயம் அழுது மாய்ந்து
வேதனையின் உச்சிக்கே ஆளா ஞேமே
பதைத்தவுடற் பரிசறிந்து பதறி யிங்கே
பாவிகளே அழுகின்ருேம் புலம்பு கின்ருேம்.

### (பொது)

நீதிக்கு நேர்மை நெறிக்கென்று வாழ்ந்த புனிதனுயிர்
பாதிக்குட் போன பரிவா லுறவினர் ஊரவர்கள்
ஏதுக் கினியெமக் கின்னுயிர் என்பது போற்பதறி
மோதிக் கதறின காட்சி புகலுதல் தானெங்ஙனே.

மற்றவர் வாழ்வு மலரப் பணிபுரி மாமனிதன்
குற்றம் பொறுத்துக் குணமது போற்றி வளர்ந்தவனே
சற்றும் எதிர்பார்த் திடாத பொழுதில் மறைந்ததனுல்
சுற்றம் அயலல்ல ஊர்முற்று மேங்கித் துடித்ததுவே.

கையது தெய்வப் பணிசெய்ய ஏத்த எனவிருந்த
ஐயனெம் வல்லி புரநாத னேலோன் அகன்றதனுல்
செய்வது யாதென் றறிகில ராகி அருவிகண்ணிற்
பெய்வது ஒன்றே புரிந்தார் பிறிதென்ன பேசுவதே

தேசாதி தேசம் எதனிலும் தேடினும் காண்பரிய
ஆசானு பாகு இவனென்ன நின்ற தவநெறியான்
மாசேது மில்லா மனத்தினன் மாண்டு மறைந்துவிட
ஈசா வுனக்கிது ஏற்குமோ என்றேசி ஏங்கினமே.

### தேற்றம்

தோற்றும் உயிர்க்கணங்கள் தொல்லுலக வாழ்வகற்றி
ஈற்றில் மறைத லியற்கையே — கூற்றனுடன்
ஈசனடி வல்லிபுர நாதன் படர்ந்திட்டான்
நாசம் துயர்விடுக நீர்.

- பொற்கை கரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலல்

அன்புடையீர்!

எமது அன்புக்கணவரின் மரணக்கிரியையிலும் அந்தியேட்டிக் கிரியையிலும் கலந்து கொண்டோர், துக்கம் பகிர்ந்தோர், உடனின்று உதவினோர் அனைவர்க்கும் இதயநன்றி.

துன்னாலை,
04-11-1987.

திருமதி
இராசேஸ்வரி வல்லிபுரநாதன்



கலாலய - நெல்லியடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org